# பிரேம வாஹினி

பகவான்

ஸ்ரீ சத்ய சாயி பாபா

52. The Course of life of a forest dweller

## வானப்ரஸ்தம்

இல்லறவாசியாக இருந்து இன்பதுன்பம், மகிழ்ச்சியை அனுபவித்துவிட்டு, இவையனைத்தின் உண்மையான உட்பொருளைக் கற்று, 40,50 வயது அடைந்த பிறகு, தான் கட்டியதும் வாழ்ந்ததுமான மனையைவிட்டு மனிதன் ஓய்வுகொள்ள வனத்துக்குப் போக வேண்டியிருக்கிறது. அப்போது அவனுடைய மனைவி வாழ்ந்துகொண்டிருந்தால் அவளது அனுமதியைப் பெற்று, அவளைக் காப்பாற்றும் பொறுப்பை மகன் அல்லது பெற்றோர்களிடம் ஒப்படைத்துவிட்டு அல்லது அவளிடம் சகோதரி பாவனையுடன் நடந்து ப்ரம்மச்சர்யத்தில் ஆழ்ந்துவிடவேண்டும். உணவிலும் பெரிய அளவில் மாறுதல் இருக்கும். அவன் கனி, கிழங்குவகைகள், பாலை மட்டுமே உட்கொள்ளவேண்டும். எதையும் முழுமையாகச் சுடவைக்காமல் 1/3 மடங்கு சூடு செய்யலாம். அரிசியை அதிகமாகப் பயன்படுத்தக்கூடாது. இந்த அடிப்படையில் உணவுக்கு ஏற்பாடு செய்ய இயலவில்லையேல் அருகிலிருக்கும் ஊருக்குள் சென்று யாசித்து உண்ணவேண்டும்; ஆனால் அதைத் தான் வசிக்கும் வனப்பகுதிக்குக் கொண்டு வந்தே உண்ணவேண்டும். அவர் உட்கொள்ளும் அதே உணவைத்தான் அவரைச் சார்ந்தோர்க்கும் வழங்கவேண்டும். ஏனெனில் அவர்கள் விரும்பும் உணவைச் சமைக்ககூடாது; யாசிக்கவும் கூடாது. அது அவர்களுக்கு ஒவ்வாது இருப்பின், அவர்கள் பால் பழங்களுடன் திருப்திப்பட வேண்டியதுதான். ஏனெனில் மற்றவர்களைத் திருப்தி செய்வதற்காக அவன் தனது ஒழுங்கான நடைமுறையை மாற்றக்கூடாது. எத்துணை இடர்பாடுடையதாக இருப்பினும் கட்டுப்பாட்டை மாற்றக்கூடாது; மீறக்கூடாது. இதை அழுத்தமாகப் பதித்துக் கொள்ளவேண்டும். ஏதாவதொரு வழிபாடு அல்லது ஈகை அல்லது அது போன்ற கடமைகளில் அவன் ஈடுபடக்கூடாது. ஒருவேளை அவன் உணவு அல்லது மற்ற பொருள்களைக் கொடுத்தாலும் அது தானமாகக் கருதப்படமாட்டாது. மற்றவர்களிடமிருந்தும் அவன் தானம் எதையும் பெறக்கூடாது. அனைவரிடமும் சம அளவில் தூய அன்பு செலுத்த வேண்டும். ஆண்டுக்கொரு முறை பழைய துணிகளைக் களைந்துவிட்டு புத்துத்துணிகளை அஸ்விஜ மாதத்தில் அணிய வேண்டும். வானப்ரஸ்த விரதங்களில் மிகமிக முக்கியமான விரதம் சந்த்ராயன விரதம்; அந்த மாதத்தில் முதல் 15 நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கவளம் அதிகரிக்கவேண்டும். அமாவாசை, பௌர்ணமி நாட்களில் கஞ்சி மட்டுமே கொள்ளவேண்டும். மழைக்காலங்களில் மழையில் நனைந்த வண்ணம் தவம் செய்ய வேண்டும்; பனிக்காலங்களில் ஈர உடையுடன் தவம் செய்ய வேண்டும். இப்படி முறைப்படி தவம் செய்யும்போது நாளொன்றுக்கு மும்முறை குளிக்க வேண்டும். பலவகை உபநிஷதக் கருத்துக்களைக் கற்று, அவற்றின் பொருளை புரிந்து அவற்றை அனுபவத்தில் கொண்டுவரவேண்டும். அப்படிப்பட்ட வானப்ரஸ்தன் ஏதாவது நோய்க்கு ஆட்பட்டுவிட்டால், அப்போது முதல்

வாடிக்கையான உணவை ரத்து செய்துவிட்டு காற்று, நீரை உட்கொண்டு வாழவேண்டும். அதன்பின் அவன் வடகிழக்க்கு திக்கு நோக்கித் தொடர்ந்து நடப்பான்; இறக்கும்வரை நடந்து கொண்டே இருப்பான். அதற்கு மாறாக உடலில் நோயில்லாமல், மேற்கூறப்பட்ட கட்டுப்பாடுகளை பின்பற்றி பலத்தோடும், நலத்தோடும் இருப்பானாகில் மெய்ஞானம் தானாக உதயமாவதை அவன் அனுபூதியில் காண்பான். அந்த ஞானத்தின் மூலம் அவன் மோட்சம் அடைவான்.

**53. External and Internal Disciplines are necessary for one-pointed devotion**

## ஒருமித்த பக்திக்கு புற, அ[illegible] ஒழுக்[illegible]ம் அவசியம்

இந்தக் கட்டுப்பாட்டின் விளைவாக ஞானம் எப்படி உதயமாகும் எனப் பலர் வாதிடுகின்றனர். இது வெறும் உடல் கட்டுப்பாடுதானே என்று அவர்கள் கேட்கிறார்கள். தத்துவத்தை உணர்வதன் மூலமே ஞானம் உதயமாகும். தத்துவத்தைத் தன்னகத்தே கொண்டிராத ஒன்று தன்னை உணர்தல் எனும் ஞானத்துக்கு எப்படி உத்தரவாதம் அளிக்கக்கூடும் என்று அவர்கள் கேட்கிறார்கள்.

ஆனால் இது பெரிய தவற்றின் அடிப்படையில் எழுவது. இப்படிப்பட்ட உடல் கட்டுப்பாடுகள் மூலம் வாசனைகள் அல்லது குணங்கள் அழிக்கப்படுகின்றன. அத்துடன் மன ஒருமைப்பாடு நிலைபெறுகிறது. இந்த ஒருமை மனப்பான்மையைப் படிப்படியாக வளர்க்கவும் வலுப்படுத்தவும் உபநிஷதக் கருத்துக்கள் உதவுகின்றன; உபநிஷத வாக்கியங்களை நடைமுறைப்படுத்தி அனுபவிக்கும்போதுதான் ஞானம் உதயமாகும். அறிவின் இருப்பிடமே உப நிஷதங்கள்தானே! இல்லையா? அந்த ஞான சொரூபத்தைத் தோழமையாகக் கொண்டு, தன் சொந்த அனுபூதியில் அதைக்கண்ட பின்பு ஞானத்தைத் தேடி எங்கெங்கோ அலைய வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? இதயத்தில் ஞானத்தை உறுதியாக நிலைநிறுத்த ஒருமை மனம் அத்யாவசியமானது; மேற்படி உடல் கட்டுப்பாடுகளை தவங்கள் மூலம் எளிதில் அடைந்துவிட முடியும்.

புறக்கட்டுப்பாடு அகக்கட்டுப்பாட்டிற்குப் பலவழிகளில் உதவுகிறது. புறக்கட்டுப்பாட்டிற்கு பதிலாக அகத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் வெற்றி பெறுவதென்பது மிகவும் கடினமானது. காரின் வளையம் மட்டுமே (ஸ்டியரிங்) காரோட்டியின் கையில் இருக்க்கிறது. காரின் சக்கரங்கள் காரோட்டியின் கையில் இல்லை; இருப்பினும் வளையத்தை ஒரு திசையை நோக்கிச் செலுத்துகையில் சக்கரங்கள் வேறு திசையில் செல்லா. உள்ளே உள்ள சக்கரங்கள் வெளியே உள்ள வளையத்துக்குக் கட்டுப்பட்டவை.

அதுதான் இயல்பான அடிப்படை. சில சமயம் வளையத்தை ஒரு பக்கம் திருப்பும்போது சக்கரங்கள் வேறுபக்கம் செல்லக்கூடும்; அது தன் இயற்கையான இயல்பிலிருந்து விலகும்போது அப்படி நேரும். கீழே உள்ள சக்கரங்களுக்குள்

காற்று (அதுதான் அவற்றின் உயிர்மூச்சு) இல்லாதபோது அவை வளையத்துடன் தொடர்பு இல்லாதது போல் இயங்கும். இப்போதும் அவை வளையத்தின் கட்டுப்பாடிற்கு அப்பால் இயங்க இயலாது. கைவளையம் (ஸ்டீரிங்) கீழ்ச்சக்கரங்களுடன் தொடர்புடையது. அப்படிப்பட்ட தொடர்பில்லையேல் பயணம் நடவாது.. அந்தத் தொடர்பைத் தவிர்க்க இயலாது. எனவே வெளி இயல்புகளுடன் போராடி அவற்றை வென்றவன் அக இயல்புகளை எளிதில் கட்டுப்படுத்தி விடுவான். வெளி இயல்புகளுக்கு நாமமும் வடிவமும் உள்ளன. அவை கவர்ச்சிமிக்க அனுபவப் பொருள்களாக மாறிக்கொண்டிருக்கின்றன. அதனால் அவற்றை வெல்வது சற்றுக் கடினமான விஷயமாக இருக்கிறது. ஆனால் உள் இயல்புகளுக்கு பெயர் இருப்பினும் உருவம் இல்லை. அத்துடன் அவை ஆனந்தத்துடன் அனுபவிக்கபடுகின்றன; அதனால் அவற்றை வெகு எளிதில் வெல்ல இயலும். அவற்றை மிகச் சுலபமாகப் பணியவைத்து விடலாம்.

வெளி நடத்தைகள், நடவடிக்கைகள் குறித்துதான் அதிகக் கவலையாக இருக்கிறது.. இவைகள் சுவை, வடிவம், கனம் ஆகியவற்றுடன் தொடர்புடையவை. ஆனால் அக இயல்புகளுக்கு சுவை, வடிவம், கனம் இல்லை. சுத்தமான நீரில் வடிவம் அல்லது சுவை இருக்காது. அதைப்போலவே அசுத்தமான நீரை சுத்தமாக்குவதும் உள்ளபடியே கடினமானது; ஆனால் சுத்தமான நீருக்கு விரும்பும் வடிவத்தைக் கொடுப்பது வெகு எளிது.

அதைப்போலவே உலக மயக்கத்தால் பாழ்பட்ட மனப்பான்மைகளைத் தூய்மை செய்வதும் மிகவும் கடினமானதுதான்; அப்படிப்பட்ட மயக்கத்திலிருந்து விடுப்படிருக்கும் மனப்போக்குகளைச் சரிசெய்யத் தேவையில்லை. மயக்கமுறாத நடத்தை நிச்சயமாக தூய்மையாகவே இருக்கும். அது சந்தேகத்தின் அடிச்சுவடுகூட இல்லாத தூய்மை. அதை ஏன் சரி செய்ய வேண்டும். எனவே மனிதர்கள் முடிந்த அளவிற்கு வெளி மயக்கங்களை முதலில் கட்டுப்படுத்தி வெல்வார்களாகில் அகத்தின் இயல்புகளை ஆத்மானந்தத்தை நோக்கி வழிப்படுத்துவது எளிதாகிவிடும்.

இந்த வெளி இயல்புகளையும், மோகங்களையும் கட்டுப்படுத்தும் மார்க்கத்தின் மற்றொரு பெயரே யோகம் அல்லது தவமாகும். வானப்ரஸ்தனுக்குரிய விதிமுறைகள் என்பவை யோகம் அல்லது தபஸில் வெற்றி பெறுவதற்கான வழிமுறைகளே; வானப்ரஸ்தன் நிலையில் அனைத்து விதமான மோகங்களையும் மனிதன் அடிபணிய வைத்துவிட்டால் பயணம் மோட்சத்தில் முடியும். ஆனால் மோட்சத்தை இந்த ஒரு வழியில்தான் அடையமுடியுமென்று நாம் சொல்ல முடியாது. அருள் எவ்வழியில் கிட்டுகிறதோ அவ்வழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். வானப்ரஸ்தனுக்குரிய இந்த விதி முறைகளாலும் நடைமுறைகளாலும் முக்தி கிட்டுகிறது. அந்த மார்க்கத்தில் வென்றால் அதை

அடையலாம்; அது ஒருவரை மோகத்திலிருந்து விடுவிக்கிறது. அது மனதுக்கு ஒன்றும் தன்மையை அருளுகிறது.

**54. The Four Stages of Liberation**

## நால்வை முக்தி

மனதை ஒருமுகப்படுத்தி தூய உணர்வுடன், புறசிந்தனை எதுவுமின்றி வழிபட்டால் அது தானாகவே (bhaava) பாவசமாதியாகிவிடும். இந்த பாவசமாதியின் விளைவாக தன் அகக்கண்ணில் இறைவன் இஷ்ட தேவதையின் உருவத்தில் தோன்றுவார். அந்தக் காட்சி கற்பனையின் விளைவு அல்ல. அது ஒரு நேர்முக அனுபவம். இடவேறுபாடு இன்றி, தன் சொந்த இடமே இறைவனின் முன்னிலையில் இருக்கும் இருப்பிடமாக அமையும். இது **சாலோக்ய முக்தி** எனப்படும். சாலோக்ய முக்தியில் எப்போதும் இறைவனுடன் இருப்பதைப் போல இருப்பதுடன், பார்க்குமிடமெல்லாம் பரமனின் மகிமையை பக்தன் உணர்ந்தால் அந்த அனுபவம் **சாமீப்ய முக்தி** எனப்படும். இறைவனுடன் எப்போதும் இருத்தல், எங்கும் இறை மகிமையை உணர்தல் ஆகியவற்றுடன் இறைச் சிந்தனையில் மூழ்கிவிடின் அது **சாரூப்ய முக்தி** ஆகும். இதுதான் பக்தி சாத்திரத்தின் இறுதிப் பயன்.

ஆனால் இந்தக் கட்டத்தில் இன்னும் ஒரு வித்யாசமான உணர்வின் சுவடு இருக்கும். எனவே இதை அத்வைத சித்தாந்தம் முடிந்த முடிவாக ஏற்றுக் கொள்வதில்லை. பக்தன் வெறுமனே சாரூப்யம் அல்லது இறைவனின் ரூபத்தை அடைந்து விட்டான் என்பதற்காக அவனிடம் ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய ஆற்றல்கள் வந்துவிட்டதாக நாம் கருதமுடியாது; வேறுபாட்டுச் சுவடுகள் அனைத்தும் மறைந்து அதிஉன்னத நிலையான ஐக்கிய நிலையை அடைந்த பின்பே அப்படிக் கருதமுடியும். இதுதான் **சாயுஜ்யம்** என அழைக்கப்படுவது. அவரவர் செய்த சாதனையின் விளைவாக சாரமான இறையருள் கிட்டும்போதுதான் இது கிட்டும்; முயற்சித்தேன் அதன் விளைவாக அது கிடைத்தாக வேண்டும் என்று அதைக் கோரமுடியாது.

இந்த ஐக்கியம் அல்லது இரண்டறக் கலத்தலுக்காக பக்தன் பெரிதும் முயலுவான்; தான் விரும்புகிறபடி இறைவனுக்கு சேவை செய்யவும், விரும்பிய கோலத்தில் அவரை அனுபவித்து மகிழவும் அவன் விரும்புவான். ஆனால் இறைவன் அவனுக்கு சாலோக்யம், சாமீப்யம், சாரூப்யம் மட்டுமல்லாமல் கருணையுடன் சாயுஜ்யத்தையும் அருள்கிறார்! பக்தி மார்க்கத்தின் விளைவாக பிரம்மஞானம் அடையப்படுகிறது. பக்தன் அதை விரும்பாவிடினும் இறைவன் அதை அவனுக்கு அருள்பாலிக்கிறார். சாயுஜ்ய முக்தியை ஏகாந்த முக்தி என்று குறிப்பிடுவார்கள்.

## சத்சங் மே இறைவனின் சாநித்யத்தை அடைவதற்குரிய வழி